சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **2/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | வரதராஜன் |
| தந்தை பெயர் | : | பழனிவேல் |
| கிராமம் | : | முகந்தனூர் |
| தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| தொழில் | : | பெட்டிக்கடை |
| வயது | : | 50 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா-1 அன்புச்செல்வன் என்பவரை எனக்கு தெரியாது. இந்த

வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் என்னுடையது. அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

கடந்த 02.11.2025 ஆம் தேதி மாலை 7.30 மணியளவில் எனது பெட்டி கடையில் நான் இருந்தபோது அங்கு வந்த நின்ற பேருந்தில் இருந்து இறங்கி அ.சா-1 வந்ததாகவும், அவருக்கு பின்னார் எதிரி வந்ததாகவும், அப்போது, எதிரி அ.சா-1 பார்த்து ஜாதி பெயரை சொல்லி அசிங்கமாக திட்டி எனது கடையில் உள்ள சோடா பாட்டிலை எடுத்து அ.சா-1 யை அடித்தாகவும், பின்னர் கட்டையால் அ.சா-1 யை அடித்தாகவும், அதை நான் பார்த்தேன் என்றும், போலீசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மேலும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தபோது என் முன்னிலையிலும், பொன்னம் மகன் குமார் முன்னிலையிலும் சோடா பாட்டிரையும், கட்டையும் கைப்பற்றினார்கள் என்றும், அப்போது தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.12 18:44:42 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.